**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 188/2024**

நாள் 11.02.2026

**அரசு தரப்பு சாட்சி** : 14 (LW15 )

சாட்சி விசாரணையை காணொளி மூலம் விசாரணை நடத்துவதற்கு இரண்டு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டதின் அடிப்படையில் சாட்சி வரவழைக்கப்பட்டுள்ளார். முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் உள்ளனர். சாட்சி டாக்டர்.மனோபாலாஜி அவர்கள் காணொளி மூலம் சாட்சி விசாரணைக்கு உதவியாக காணொளி அரங்க ஒருங்கிணைப்பாளர் நெய்வேலி சார்பு நீதிமன்ற E–Seva Kendra Technical Man Power **திரு.சக்திவேல்** என்பவர் உள்ளார். சாட்சி, இந்நீதிமன்ற காணொளி அரங்க ஒருங்கிணைப்பாளர் திருமதி.M,அமுதா, அமர்வு எழுத்தர் நிலை–I என்பவர் மூலம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிபடுத்தப்பட்டு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர்.மனோபாலாஜி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( எதிரி ஆஜர். )

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.11 13:39:49 +0530

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது நெய்வேலி NLC அரசு மருத்துவமனையில் பொது மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் இராமநாதபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்த போது, 19.11.2023 ம் தேதியன்று, மதியம் 02.30 மணியளவில் நான் பணியில் இருந்த போது, திருப்பாலைக்குடி காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுதல் கடிதத்தை பெற்று, சுமார் 49 வயது மதிக்கத்தக்க முனியசாமி என்ற ஆண் பிரேதத்தை அன்றைய தினம் 03.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்தேன். மேற்படி பிரேதத்தை தலைமைக்காவலர் பாலமுருகன் அடையாளம் காட்டினார்.

மேற்படி பிரேதத்தில் கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1). தலையின் வலது காதின் மேல் 8 x 3 x 5 செமீ ஆளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது.

2). வலது காதின் பின்பகுதியில் மற்றொரு கிழிந்த காயம் காணப்பட்டது.

3).கபாலத்தை திறந்து பார்த்த போது மூளையின் வலதுபக்கத்தின் மேல் இரத்தக்கசிவு காணப்பட்டது.

4). வலது மார்பில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

பின்னர் பிரேத்தில் இருந்து எடுக்கப்பட்ட உள்ளுறுப்புகளை இரசாயனப்பகுப்பாய்விற்காக தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். இரசாயன பகுப்பாய்வு முடித்து கிடைக்கப்பெற்ற Viscera Report RMD /TOX.H.35/2024 நாள் : 19.01.2024–ன் படி இறந்த நபரின் வயிற்றில் 497 மிகிமும், குடலில் 99 மிகிமும், கல்லீரலில் 138 மிகி, சிறுநீரகத்தில் 145 மிகி அளவிற்கு எத்தில் ஆல்கஹால் இருந்தது கண்டறியப்பட்டது. வேறு எவ்வித விஷமும் இருந்ததாக கண்டறியப்படவில்லை.

மேற்படி Viscera அறிக்கை பெற்ற பின்பு இறந்த நபர் அவரது தலையின் வலதுபக்கத்தில் ஏற்பட்ட காயத்தினால் உண்டான மூளையின்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.11 13:40:00 +0530

இரத்தக்கசிவினால் இறந்துள்ளார் என்றும், இறந்தவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உள்ளுறுப்புகளில் எத்தில் ஆல்கஹால் இருந்ததாகவும் இறுதி கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.12** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. **இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.13** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காணொலி மூலம் காட்டப்படும் ஆயுதத்தால் தாக்கப்படும் போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புண்டு. இது தொடர்பாக ஆய்வாளர் விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கில் சரித்திரம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பிரேதத்தின் உள்ளுறுப்புகள் மற்றும் வெளிபுற தோற்றங்கள் எவ்வாறு இருந்தன என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2 முதல் 4 வரையிலான காயங்களுக்கான அளவுகள் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 497 மிகி எத்தில் ஆல்கஹால் உடல் உள்ளுறுப்புகளில் கண்டறியப்பட்டுள்ளதால், அந்த நபர் மிக அதிகப்படியான மதுவின் ஆளுகையில் இருந்திருப்பார் என்றால் சரிதான்.

மேற்படி அளவிற்கான எத்தில் ஆல்கஹால் உடலில் இருந்ததால் அவரது சிறுமூளை மற்றும் பெருமூளை பாதிக்கப்பட்டு, அவர் என்ன செய்கிறோம் என்று அறியும் நிலையில் அவர் இருந்திருக்க முடியாது என்றால் அந்த அளவின் அடிப்படையில் மட்டும் கருத்து சொல்ல முடியாது. மேற்படி நபர் குடிபோதையில் தவறி கடினமான மற்றும் கரடுமுறடான பொருள் மீது விழுந்தால், மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் உயரமான இடத்தில் இருந்து தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு. இறப்பு நேரத்தை குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்பதால் குறிப்பிடவில்லை.

மேற்படி இறப்பு நேரம் மற்றும் உடலின் விறைப்புத்தன்மை பற்றி பிரேத



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.11 13:40:04 +0530

விசாரணை அறிக்கையில் குறிப்பிடாததற்கு காரணம், இறப்பு நேரம் தெரிந்து விடும் என்பதற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மேற்படி ஆயுதத்தால் காயம் ஏற்படும் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

| | | |
|---|---|---|
| Sakthivel<br>Technical Man Power,<br>E-Seva Kendra,<br>Subordinate Court,<br>Neyveli. | Deponent | M.Amutha,<br>Bench Clerk Gr.I,<br>Principal District Court,<br>Ramanathapuram.<br>**Court Site** |

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.11 13:40:06 +0530